**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No. 121/2015**

**வழக்கு சாட்சி: PW.15**

தேதி: 18.07.2024

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **கண்ணன்** | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | **கருப்பையா** | **தொழில்:** | **காவல்துறை** |
| **கிராமம்:** | **சிவகங்கை** | **சமயம்:** | **இந்து** |
| **தாலுகா:** | **சிவகங்கை** | **வயது:** | **50/2024** |

சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு

**முதல் விசாரணை:**

நான் தற்சமயம் சிலை கடத்தல் தடுப்பு பிரிவில் இராமநாதபுரம் சரகத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். 13.08.2012ம் தேதி சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியாற்றினேன். அப்போது சிவகங்கை தாலுகா காவல் நிலைய குற்ற எண் 297/2012 வழக்கு சம்பந்தமாக இறந்து போன திருமதி.முத்துராமு என்பவரது உடல் உறுப்புகளை இராசயன பரிசோதனைக்கு அனுப்ப சிவகங்கை நீதித்துறை நடுவர் எண்: 2 அவர்களிடம் உத்தரவு கடிதம் பெற்றேன். சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு சென்று மேற்படி முத்துராமுவின் உடல் உறுப்புகளை பெற்று இராமநாதபுரம் தடய அறிவியல் ஆய்வகத்தில் 03.09.2012ம் தேதி ஒப்படைத்து விட்டேன். நீதித்துறை நடுவர் எண்: 2 அவர்கள் வழங்கிய கடிதம் என்னிடம் காண்பிக்கப்படுவது தான் அது **அசாஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரேத பரிசோதனை முடிந்த பிறகு இறந்த போன நபரது

சேலை, ஜாக்கெட், பாவாடை ஒன்றை கைப்பற்றி ஆய்வாளர் மூலம் படிவம் 91 னுடன் நிதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அந்த சேலை, ஜாக்கெட், பாவாடை என்னிடம் காண்பிக்கப்படுவது தான் அது **அ.சா.பொ.4 முதல் 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சேலை, ஜாக்கெட், பாவாடை-ஐயும் இவ்வழக்கு சம்பந்தமாக நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்த வேல் கம்பையும் இராசயன பரிசோதனை செய்ய தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்க நீதித்துறை நடுவர் எண்: 2 நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று அவற்றை 02.01.2013ம் தேதி இராமநாதபுரம் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக நீதித்துறை நடுவர் எண் 2 பிறப்பித்த உத்தரவின் நகல் என்னிடம் காண்பிக்கப்படுவது தான் அது **அசாஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. இலவச சட்ட உதவி வழக்கறிஞர் Defence counsel தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் இறந்து போன நபரது உடல் உறுப்பு எதையும் ஆய்வகத்திற்கு கொண்டு போய் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் இறந்து போன நபரது உடைகள் எதையும் கைப்பற்றவில்லை என்றும் அவற்றை ஆய்வகத்தில் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. நான் சொன்ன போல் வேல் கம்பு எதையும் ஆய்வகத்திற்கு நான் எடுத்துச் செல்லவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. புலனாய்வு அதிகாரி எனது

உயர் அதிகாரி என்பதால் அவருக்கு ஆதராவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No. 121/2015**

**வழக்கு சாட்சி: PW.14**

**தேதி: 18.07.2024**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **தனசேகரன்** | **ஜாதி:** | **மறவர்** |
| **தந்தை பெயர் :** | **கொங்கேஸ்வரன்** | **தொழில்:** | **காவல்துறை** |
| **கிராமம்:** | **சிவகங்கை** | **சமயம்:** | **இந்து** |
| **தாலுகா:** | **சிவகங்கை** | **வயது:** | **58/2024** |

சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு

**முதல் விசாரணை:**

நான் தற்சமயம் சிவகங்கை நகர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். 31.07.2012ம் தேதி சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றிய போது மேற்படி காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் ராமச்சந்திரனிடமிருந்து மேற்படி காவல் நிலைய குற்ற எண் 297/2012 வழக்கு சம்பந்தமாக துரித முதல் தகவல் அறிக்கையை பெற்று சிவகங்கை நீதித்துறை நடுவர் எண்: 2 நீதிபதியிடம் உயர் அதிகாரியிடமும் ஒப்படைத்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No. 121/2015**

**வழக்கு சாட்சி: PW.16**

தேதி: 18.07.2024

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **சந்திரசேகர்** | **ஜாதி:** | **அகமுடையார்** |
| **தந்தை பெயர் :** | **சாரதி** | **தொழில்:** | **விவசாயம்** |
| **கிராமம்:** | **திருப்புவனம்** | **சமயம்:** | **இந்து** |
| **தாலுகா:** | **திருப்புவனம்** | **வயது:** | **64/2024** |

சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு

**முதல் விசாரணை:**

நான் சிவகங்கை டவுன் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளாராக பணியாற்றி ஓய்வு பெற்று விட்டேன். 27.04.2013ம் தேதி நான் சிவகங்கை தாலுகா நிலையத்தில் பணியாற்றிய போது மேற்படி காவல் நிலைய குற்ற எண் 297/2012 வழக்கு சம்பந்தமாக இராமநாதபுரம் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஆய்வுக்காக ஒப்படைக்கப்பட்டிருந்த மேற்படி வழக்கு சம்பந்தமான சொத்துக்களையும் தடய அறிவியல் ஆய்வக அறிக்கையையும் பெற்று சிவகங்கை நீதித்துறை நடுவர் எண்: 2 நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரிக்க நடந்த விபரங்களை கூறினேன்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. இலவச சட்ட உதவி வழக்கறிஞர் Defence counsel தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் ஆய்வகத்தில் பெறும் போது பெட்டி மூடி சீல் இடப்பட்டிருந்தது. அதற்குள் என்ன வழக்கு சொத்து இருந்தது என்று எனக்கு தெரியாது. நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் ஆய்வகத்தில் இருந்து அறிக்கை எதையும் பெறவில்லை என்றும் வழக்கு சொத்தை பெற்று திரும்ப நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றும் சொன்னால் அது சரியல்ல.